எம்.சி.ஓ.பி எண்: 1772/2021 தேதி: 22.09.2025

மசா. : 1

பெயர் : சிவசுப்பிரமணியன்

த/பெ. : கேசவன்

வயது : 46

**<u>சத்திய பிரமாண செய்விக்கப்படுகிறார்</u>**

**<u>முதல் விசாரணை</u>**

நான் இம்மனுவில் மனுதாரர் ஆவேன். நான் என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்திய பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அதனை படித்து பார்த்து கையொப்பம் செய்தேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். மேலும் என்னுடைய சாட்சியத்திற்கு ஆதரவாக சான்று ஆவணங்கள் மசாஆ 1 முதல் 13 வரை தாக்கல் செய்கிறேன். மனுப்படி இழப்பீடு வழங்க வேண்டுகிறேன்.

**<u>2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரி. விபத்து குறித்த மாதிரி வரைபடம், குற்றப்பத்திரிக்கை மற்றும் மோட்டார் வாகன ஆய்வறிக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அவைகளை தாக்கல் செய்தால் இந்த விபத்து என்னுடைய மகன் அமர்ந்து சென்ற ஓட்டுநரின் கவனக்குறைவால் ஏற்பட்டுள்ளது என்று தெரியவரும் என்பதால் அவைகளை தாக்கல் செய்யாமல் தவிர்த்துள்ளீர்கள் என்றால் சரியல்ல. விபத்து என் மகனின் அஜாக்கிருதையால் நடந்துள்ள காரணத்தால் நான் ஏதவாது இழப்பீடு பெறவேண்டுமானால் என் மகன் அமர்ந்து சென்ற வாகனத்தின் உரிமையாளர் மற்றும் காப்பீட்டாளரிமிருந்துதான் பெறவேண்டும் என்றால் சரியல்ல. என் மகன் பயணம் செய்த வாகன ஓட்டுநரின் ஓட்டுநர் உரிமம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. என் யாருடைய வாகனத்தில் அமர்ந்து சென்றார் என்று எனக்கு தெரியாது. என் மகன் அமர்ந்து சென்ற TN–18–BA–9092 வாகன ஓட்டியின் அஜாக்கிருதையால்தான் இந்த விபத்தே நடந்தது என்றால் சரியல்ல. எனவே 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. என் மகனின் தொழில், வருமானம், வருமான இழப்பு சம்பந்தமான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. 1ம் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டியின் ஓட்டுநர் உரிமம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. 1ம் எதிர்மனுதாரர் வாகனம் ஓட்ட ஓட்டுநர் உரிமம் இல்லாமல் வாகனத்தை ஓட்ட அனுமதித்த காரணத்தால் 2ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர்

அல்ல என்றால் சாியல்ல. நான் பல்வேறு தலைப்புகளில் கோாியுள்ள இழப்பீடு தொகை அதிகம் என்றால் சாியல்ல. வழக்கு தள்ளுபடி ஆகவேண்டும் என்றால் சரியல்ல.

X

**<u>மறுவிசாரணை இல்லை</u>**

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்ல சொல்ல கணிப்பொறியின் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சாி என்று ஒப்புக்கொண்ட பின்பு அவாிடம் கையொப்பம் பெறப்பட்டது.